**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, NAGERCOIL.**
**Case Number: CC 240/2024**
**PW: 10**

| | | | |
|---|---|---|---|
| Name | : ஜெசிமேனகா | Calling | : சிங்கப்பெண் சிறப்பு படை - உதவி ஆய்வாளர் |
| Father's / Husband Name | : ஜான் | Religion | : |
| Village | : திருநெல்வேலி | Age | : 32 |
| Taluk | : திருநெல்வேலி | | : |

**SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF Oaths Acts 1969 (Central Act 44 of 1969) OF THE DAY OF 06.08.2026**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் தற்போது திருநெல்வேலியில் சிங்கப்பெண் சிறப்பு படையில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன் நான் ஆசாரிப்பள்ளம் காவல் நிலையத்தில் கடந்த 03.05.2024 ம் தேதி அன்று ஆசாரிப்பள்ளம் காவல் நிலையத்தில் சார்பாய்வாளராக பணியாற்றிய போது தலைமை காவலர் கணேசன் என்பவர் பதிவு செய்த கு. எண். 41/2024, பிரிவுகள் 447, 294 (பி), 324, 506 (2) இதச வழக்கினை நான் எனது விசாரணைக்கு எடுத்து கொண்டேன்.

2. சம்பவஇடத்திற்கு 03.05.2024 ம்தேதி அன்று காலை 9.30 மணிக்கு சென்று சாட்சிகள் ஸ்டாலின் ராஜசிங் மற்றும் கோபாலன் ஆகியோர ்முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பாரவை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன.**மாதிரி வரைபடம் அ.சா.ஆ 6 ஆகும்.**

3. பார்வதிபுரத்தில் உள்ள ஆசீர் மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிட்சையில் இருந்த புகார்தாரர் ராபீன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளான வின்சில்லா, அருள்தாஸ், ஜோசப், ஜோஸ் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பார்வை மகஜர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். முதல் தகவல்அறிக்கை பதிவு செய்த தலைமை காவலரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

4. புகார்தாரருக்கு சிகிட்சை அளித்த மருத்துவர் ஆசீரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றேன். 28.05.2024 ம் தேதி அன்று இவ் வழக்கின் எதிரி முன் பிணை பெற்றுள்ளதால் அவரை கைது செய்யாமல் வழக்கின் புலன் விசாரணை முடித்து 02.06.2024 ம் தேதி அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

## குறுக்கு விசாரணை

1. நான் சம்பவ இடத்திற்கு சென்றது எந்த தேதி, எத்தனை மணிக்கு என்றால் 03.05.2024 ம் தேதி அன்று காலை 9.30 மணிக்கு சென்றேன். எதிரிக்கும் சம்பவத்தில் காயம்பட்டிருந்தது என்றால் எதிரி தலைமறைவாகி விட்டதால் எனக்கு தெரியாது. புகார்தாரரிடம் ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனையில் வைத்து வாக்குமூலம் பெற்றேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் காயம்பட்டு அவர் ஆசாரிப்பள்ளம் மருத்துவமனையில் 1 மாத காலம் உள்நோயாளியாக சிகிட்சை பெற்றார் என்றாலும்

எனக்கு அந்த விபரம் தெரியும் என்றாலும் சரியல்ல. சம்பவத்தன்றே ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனையிலிருந்த எதிரியிடம் புகார்தாரருக்கு எதிராக ஆசாரிப்பள்ளம் காவலர் வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றால் தெரியாது. எதிரி கொடுத்த புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யாமல் எதிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு புகார் கொடுத்து 1 மாதம் கழித்து எதிரி கொடுத்த புகாரின் பேரில் ஆசாரிப்பள்ளம் காவல் நிலையத்தார் விசாரித்தார்கள் என்றால் தெரியாது.

2. அ.சா.ஆ. 6 வரைபடத்தில் சம்பவமானது கல்யாண மண்டபம் காம்பவுண்டிற்குள் நடந்ததாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்தை எத்தனை மணி நேரம் ஆய்வு செய்தேன் என்றால் நினைவில்லை. பார்வை மகஜர் சாட்சிகள் இருவருக்கும் மண்டபத்திற்குள் வேலை இல்லை என்றால் எனக்கு தெரியாது. பார்வை மகஜர் சாட்சிகள் இருவரும் கல்யாண மண்டபத்திற்குள் வர வேண்டிய அவசியம் இல்லை என்றால் பொது இடம் என்றால் யார் வேண்டும் என்றாலும் வருவார்கள் அவர்களுக்கு அவசியம் இருந்ததா என்று எனக்கு தெரியாது.நான் சம்பவ இடம் செல்லாமல், சாட்சிகளை நான் சொன்ன இடத்தில் வைத்து விசாரிக்காமல் காவல் நிலையத்தில் வைத்து வழக்கு ஆவணங்கள் அனைத்தையும் நான் தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையிலேயே நான் சம்பவ இடம் போயிருந்தால் எதிரி கொடுத்த புகார் மீதும் நான் வழக்கு பதிவு செய்திருப்பேன் என்றாலும் நான் எதிரிக்கு எதிராக ஒரு தலைபட்சமாக நடந்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் சொன் னநாள், சொன்ன தேதியில் வழக்கு விசாரணை

நடைபெறவில்லை என்றாலும் வழக்கு ஆவணங்கள் தயார் செய்யவில்லை என்றாலும் வழக்கில் முழு விசாரணை செய்யாமல் எதிரிக்கு எதிராக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மண்டபத்தில் கண்காணிப்பு கேமரா இருந்ததா என்றால் இருந்தது. அந்த பதிவுகளை எடுத்து இந்த வழக்கில் தாக்்ல செய்யவில்லை என்றால் சரியல்ல.

இந்நீதிமன்றத்தில் பகிரங்கமாக சாட்சி சொல்ல என்னால் சொல்லப்பட்டு தட்டெழுத்தரால் கணினியில் பொறிக்கப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

குற்றவியல் நடுவர் எண்.1(முழு.கூ.பொ)
நாகர்கோவில்